TAMIL

# உங்கள் குடும்பத்திற்கு மிகப் பொருத்தமான விளையாட்டுக் குழுவைக் கண்டுபிடியுங்கள்

பச்சிளம் குழந்தைகள் முதல் பள்ளி செல்லும் குழந்தைகள் வரை பலதரப்பட்ட வயதுடைய குழந்தைகளுக்கான சமூக விளையாட்டுக் குழுக்களை வழங்குகிறோம்.

NSW முழுவதும் இந்த நூற்றுக்கணக்கான விளையாட்டுக் குழுக்கள் ஒவ்வொரு வாரமும் சந்திக்கின்றன. எங்களிடம் குழந்தைகளுள்ள குடும்பங்கள், தந்தையர், பெற்றோரின் பெற்றோர், உள்நாட்டுக் குடும்பங்கள், முதல் முறை தாயானவர்கள், பல மொழிகளைப் பேசுவோர் மற்றும் பல விஷயங்களின் மீது கவனம் செலுத்தும் குழுக்களும் உள்ளன. மேலும் நாங்கள், கூடுதல் தேவைகளுள்ள குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் பல வகையான விளையாட்டுக் குழுக்களையும் நண்பர்கள் ஆதரவுக் குழுக்களையும் நடத்துகிறோம்.

NSW முழுவதுமுள்ள அனைத்து விளையாட்டுக் குழுக்களிலும் உங்களுடையதைப் போன்ற புதிய குடும்பங்களுக்கு இடமுள்ளது. உங்கள் சமூகத்தில் ஒரு விளையாட்டுக் குழுவைக் கண்டுபிடிக்க, எங்கள் இணையதளத்தில் ஒரு விளையாட்டுக் குழுவைக் கண்டுபிடி தேடல் கருவியைப் பயன்படுத்துங்கள். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், எங்களது விளையாட்டுக் குழுவின் உதவிக் குழுவை அழையுங்கள்.

### ஒரு விளையாட்டுக் குழுவைத் தொடங்குங்கள்

உங்களுடைய இருப்பிடத்திற்கு அருகே விளையாட்டுக் குழு இல்லையென்றால், அல்லது ஒரு குறிப்பிட்ட மொழி, கலாச்சாரம் அல்லது ஆர்வத்தில் ஈடுபாடுள்ளவராக இருந்தால், நீங்கள் ஒரு விளையாட்டுக் குழுவைத் தொடங்க விரும்பலாம். மேலும் தகவல்களுக்கு, எங்கள் இணையதளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது எங்கள் 1800 எண்ணை அழையுங்கள்.

# PLAYGROUP NSW உறுப்பினர்உரிமை

குடும்பங்கள் இரண்டு விளையாட்டுக் குழு அமர்வுகளில் கலந்து கொள்ளலாம், அதன் பின்னர் உங்கள் உள்ளூர் விளையாட்டுக் குழுவில் தொடர்ந்து பங்கேற்க Playgroup NSW உறுப்பினராக வேண்டும்.

குடும்ப உறுப்பினர்உரிமையில் ஐந்து குழந்தைகள் வரையிலும், அவர்களுடைய பெற்றோரும் குழந்தைகளைப் பராமரிப்பவர்களும் அடங்குவார்கள்.

**உறுப்பினர்உரிமையில்:**

- NSW முழுவதும் 1,000 -க்கும் மேற்பட்ட வாராந்திர விளையாட்டுக் குழு அமர்வுகளுக்கு கட்டுப்பாடுகளற்ற அணுகல்.
- Playgroup NSW சார்ந்த விளையாட்டுக் குழுக்கள் மற்றும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளும்போது உங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட முழுமையான விளையாட்டுக் குழு காப்பீட்டுக் காப்புறுதி

**Playgroup NSW உறுப்பினராவது மிகச் சுலபம்:**

- எங்கள் playgroupnsw.org.au இணையதளத்தில் ““Join Now” ஐகானை கிளிக் செய்தால் போதும்

உங்களது $39 வருடாந்திர உறுப்பினர்உரிமைக் கட்டணம், Playgroup NSW -க்கு நேரடியாகச் செலுத்தப்படும். ஹெல்த் கேர் கார்டு (Health Care Card) உரிமையாளர்களுக்கு $20 -க்கு தள்ளுபடிக் கட்டணத்தில் உறுப்பினர்உரிமை (Concession Membership) கிடைக்கும். கலைவினைச் செயல்பாடுகள், பொம்மைகள் மற்றும் இருப்பிட வாடகைக்காக உங்களுடைய உள்ளூர் விளையாட்டுக் குழு கூடுதலாக சிறிதளவு வாராந்திர அமர்வுக் கட்டணம் வசூலிக்கலாம்.

**இன்றே இணையுங்கள்!**

Playgroup NSW

T 1800 171 882
W playgroupnsw.org.au
A PO Box 181, Granville NSW 2142

© Playgroup NSW 2016. All rights reserved.

Playgroup NSW

LET'S GET SOCIAL



# விளையாட்டுக் குழு என்றால் என்ன?

விளையாட்டுக் குழு என்பது குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கான முதல் மற்றும் மிக முக்கியமான சமூகக் குழுக்களில் ஒன்று.

விளையாட்டுக் குழு என்பது, பெற்றோரும், குழந்தைகளைப் பராமரிப்பவர்களும் பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகளும் ஒன்றாக இணைந்து, கலந்து பழகுவதற்கும், விளையாடுவதற்கும், கற்பதற்கு ஒன்று கூடுவதற்கும் பொருத்தமான தளர்வான கட்டமைப்புள்ள, முறைசாரா கூட்டமைப்பு.

விளையாட்டுக் குழுக்கள், வாரம் ஒருமுறை இரண்டு மணி நேரத்திற்கு பொதுவாக காலை நேரங்களில் பலதரப்பட்ட சமுதாயக் கூடங்களில் நடத்தப்படும். இதில் கைவினைச் செயல்பாடுகள், உட்புற, வெளிப்புற விளையாட்டுகள், இசை மற்றும் காலைநேரத் தேநீர் போன்றவை இருக்கும்.



# விளையாட்டு குழு உங்கள் குழந்தைக்கு எவ்வாறு உதவி செய்கிறது

- படைப்புத்திறன், விளையாட்டு மூலம் முறைசாராக் கற்றல் ஆகியவற்றுக்கான வாய்ப்பினை வழங்குகிறது
- புதிய விஷயங்களை உருவாக்கவும், கண்டுபிடிக்கவும், அதற்கான காரணத்தை ஆராயவும் மற்றும் பிழை தீர்க்கும் வாய்ப்பினையும் அளிக்கிறது
- பெரியவர்களும் குழந்தைகளும் சேர்ந்து விளையாடி, நேரத்தையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும்போது அவர்களுக்கிடையே பிணைப்பு உருவாகிறது
- குழந்தைகள் தங்களது நண்பர்களுடன் உரையாடுதல், சிக்கல்களைத் தீர்த்தல், முறை வைத்து விளையாடுதல், பகிர்ந்து கொள்ளுதல், நண்பர்களை உருவாக்கிக் கொள்ளுதல் போன்ற சமூகப் பண்புகளைக் கற்றுக் கொள்ள உதவுகிறது
- புதிய தீர்வுகளை ஏற்றுக் கொள்ளுதல், மன அழுத்தத்தை நிர்வகித்தல் மற்றும் மாற்றத்திற்கேற்ப மாறிக் கொள்ளுதல் போன்றவற்றுக்கு அவர்களை தயார் செய்வதற்கான மனஉறுதியை உருவாக்குகிறது

எனது குழந்தைகள் நட்பு, பிறரைச் சார்ந்திருத்தல் மற்றும் மற்றவர்களுடன் விளையாடுவதில் உள்ள மகிழ்ச்சி ஆகியவற்றைப் பற்றி கற்றுக் கொள்ள விளையாட்டுக் குழு உதவியது.

# குடும்பங்களுக்கு விளையாட்டுக்குழு எவ்வாறு உதவி செய்கிறது

விளையாட்டுக் குழு, அதே போன்ற சூழ்நிலையிலுள்ள பிற மனிதர்களைச் சந்திக்கும் அற்புதமான வாய்ப்பினை வழங்குகிறது. அது நீங்கள் புதிய நண்பர்களைப் பெறவும், ஒருவருக்கொருவர் கற்றுக் கொள்ளவும், உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் ஆதரவான ஓர் உள்ளூர் நட்புவளையத்தை வளர்க்கவும் வாய்ப்பளிக்கிறது.

**விளையாட்டுக்குழு உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் இவற்றை அளிக்கிறது:**

- பெற்றோரும், குழந்தைகளைப் பராமரிப்பவர்களும் ஒருவருக்கொருவர் கருத்துக்களையும், குழந்தை வளர்ப்பு அனுபவங்களையும், கவலைகளையும், தகவல்களையும் பகிர்ந்து கொள்ள ஓர் இடம்.
- குழந்தைகள் வளர்ந்து, பள்ளிகளுக்குச் செல்லும் பருவத்தில் குடும்பங்கள் நீண்ட-கால உறவுகளை வளர்த்துக் கொள்ளும் இடம்.
- அனைவரும் ஒன்று சேர்ந்து மகிழ்வதற்கு குறைந்த கட்டணத்தில் தொடர்ச்சியான வாய்ப்பு

விளையாட்டுக் குழு மகிழ்ச்சியானது, சமூகத்துடன் இணைவதற்கு ாய்ப்பளிக்கிறது, எங்களுடைய வாராந்திர செயல்பாட்டின் ஒரு பகுதி.

விளையாட்டுக் குழு ஒரு சமூகமாகவும், எனக்கும் எனது பெற்றோருக்கும் ஆதரவளிக்கும் குழுவாகவும் மாறிவிட்டது.